1994 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சியிலிருந்து விக்கிரவாண்டி 34.1 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. அந்தப் பகுதியில் நாள்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட புறநகர் பேருந்துகளை அந்த வழித்தடம் வழியாக இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகரப் பேருந்தை இயக்க வேண்டுமென்று சொன்னார்கள், 30 கிலோ மீட்டர் இருந்தால்தான் நகரப் பேருந்துகளை இயக்க முடியும். ஓரிரு கிராமங்களுக்கு பேருந்து வசதியே இல்லை என்று சொன்னால் 30 முதல் 35 கிலோ மீட்டர்வரை நகரப் பேருந்துகளை இயக்குகின்ற சாத்தியக்கூறுகள் இருக்கும்.

முற்பகல் 10.25

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகள் இயக்கமுடியாவிட்டாலும் ரூட் பஸ் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினைந்து நாட்களுக்குள் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 167, திரு. வே. பெரியசாமி ; மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

167--

அந்தியூர் தொகுதியில் புதிய நூற்பாலை அமைத்தல்

***24489-திரு. வே. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் ஓர் புதிய நூற்பாலை திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதிய நூற்பாலை திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[1994 ஏப்ரல் 4

திரு.வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பல ஆண்டுகளாக நூற்பாலை வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். இந்தப் பகுதி அதிகமாக பருத்தி விளையக் கூடிய ஒரு பகுதியாகும். கோபி, சத்தியமங்கலம், அந்தியூர், பவானி, பெருந்துறை, காங்கேயம், வெள்ளக்கோயில் போன்ற பகுதிகள் எல்லாம் இந்த பெரியார் மாவட்டத்திலுள்ள பிற்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. இந்தப் பகுதியிலே தொழில் வளம் மிகவும் குறைந்திருக்கிறது. தொழிலாளர்கள் இங்கேயிருந்து கொடைக்கானலுக்கும், நீலகிரிக்கும் வேலைக்காக அலைகிறார்கள். பருத்தியை இங்கேயிருந்து அதிகமாக வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இல்லையென்று சொன்னார்கள். எதையும் தாங்கும் இதயம் படைத்த எங்கள் கடவுளுடைய ஆட்சியில் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்தியூர் தொகுதியில் பெரிய நூற்பாலையை ஏற்பாடு செய்து ஏராளமான மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க ஆவன செய்வார்களா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியைச் சுற்றிலும் பருத்தி உற்பத்தி ஆவதாக மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். நான் அந்தியூர் பெரியசாமி அவர்களைத் தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அந்தப் பகுதியில் உற்பத்தியாகிற பருத்தியை -- அருகாமையில் ஏறத்தாழ 75-80 கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கிற கூட்டுறவு நூற்பாலையான தாராபுரம் கூட்டுறவு நூற்பாலைக்குக் கடனுக்கு பருத்தி தந்தால்,--கடனுக்கு, கடனுக்குப் பருத்திதந்தால் அந்த நூற்பாலை, நஷ்டத்தில் இயங்குகிற நூற்பாலை, லாபத்தை ஈட்டுவதற்கு நல்ல வழிவகை இருக்கும். அது 25,000 கதிர்களுடன் சிறப்பான முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் படிப்படியாக அது லாபத்தை ஈட்டுகின்ற அளவுக்கு வளர்ந்துகொண்டிருக்கிறது. ஆதலால் இந்த அந்தியூர் கேள்வி எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், கடனுக்கு, கடனுக்கு என்று இரண்டு மூன்று முறை அழுத்துவதைப் பார்த்தால் கடன் திரும்ப வருமா என்ற சந்தேகம் திரு. பெரியசாமிக்கு வரப்போகிறது. (சிரிப்பு)

1994 ஏப்ரல் 4]

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு சிறப்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே தாராபுரம் தொகுதியில்லை. கோவை மாவட்டத்தில் உள்ள பகுதியில்தான் பாதி இருக்கிறது. அருகாமையிலே திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள மக்களெல்லாம் அங்கே வேலைக்குப் போகிறார்கள். ஆனால் பெரியார் மாவட்டம் கடந்த காலத்தில், கடந்த ஆட்சியாளர்கள் காலத்தில் தொழில் துறையில் மிகப் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படாத காரணத்தினால் பக்கத்திலே இருக்கிற கோபிசெட்டிபாளையம் தொகுதிக்கும், பவானிசாகர் தொகுதிக்கும், சத்தியமங்கலம் தொகுதிக்கும் ஏராளமான ஆலைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இதயதெய்வம், நான் கடவுளாக ஏற்றுக்கொண்டிருக்கிற அன்னையினுடைய ஆட்சியில், புனிதத் தாயினுடைய ஆட்சியில் உங்கள் மூலமாக, கருணை உள்ளம் கொண்ட தங்களின் மூலமாகப் பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வதெல்லாம், தயவு செய்து எங்களுடைய இதயதெய்வத்தின் நல்லாசியோடு விரைவிலேயே எங்களுக்கு நூற்பாலை கிடைக்க ஆவன செய்வார்களா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்தியூர் பெரியசாமி அவர்கள் இந்த அவைக்குத் தவறான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தாராபுரம் என்பது வெள்ளக்கோவில் தொகுதியிலே இருக்கிற ஒரு நூற்பாலை ஆகும். இந்த பெரியார் கூட்டுறவு நூற்பாலை தற்போது வெள்ளக்கோவில் தொகுதியில்.. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெரியசாமி ஒரு தவறான தகவல் கொடுத்தால், நீங்களும் ஒரு தவறான தகவலைக் கொடுக்கிறீர்கள். தாராபுரம், வெள்ளக்கோவில் தொகுதியில் இல்லை. தாராபுரமே ஒரு தொகுதி.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: பெரியார் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை வெள்ளக்கோயில் தொகுதிக்குட்பட்ட நூற்பாலையாகும். அதுமட்டுமின்றி, இப்பொழுது தமிழகத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. அனைத்து நூற்பாலைகளும் ஏறத்தாழ 13.52 இலட்சம் சிட்டா நூலையும், 11.5 இலட்சம் கோன் நூலையும் உற்பத்தி செய்து

வருகின்றன. இப்பொழுது தமிழகம் நூல் உற்பத்தியில் உபரியாக இருக்கிற காரணத்தினால்--அதுமட்டுமல்லாமல் 900 தனியார் நூற்பாலைகளும் தமிழகத்தில் இருக்கின்றன; இவ்வகைளுக்குத் தேவையான பருத்தி ஏறத்தாழ 30 இலட்சம் பேல்கள் ஆகும். இப்பொழுது பருத்தி உற்பத்தி தமிழகத்தில் 5 இலட்சம் பேல்கள்தான் உற்பத்தி ஆகின்றது. ஆதலால்தான் இந்தக் கேள்வி எழவில்லை. அந்தியூர் தொகுதி மலைப் பிரதேசமான தொகுதி. ஆதலால் அங்கே நூற்பாலைகள் அமைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் கோபி, பவானிசாகர், சத்தியமங்கலம் பகுதியிலே அதிக அளவிலே கூட்டுறவு நூற்பாலைகள் இருப்பதாகத் தவறான கருத்தைச் சொல்கிறார். * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பொதுவாகத் தொழிற்சாலைகள் மிகுந்து இருக்கின்றன என்று சொன்னார். கூட்டுறவு நூற்பாலையைச் சொல்லவில்லை. * * எல்லாம் இங்கே இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உங்களுக்கு இருக்கிற வேறு விஷயத்தை எல்லாம் இங்கே காண்பிக்கக் கூடாது. வேறு கேள்வி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் அந்தியூரில் வேண்டுமானால் கேட்கட்டும்; நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. எங்களுடைய பகுதி மக்கள் திருப்பூருக்கு கூலி வேலைக்கு அதிகமாகச் செல்கின்றார்கள். குறிப்பாக இந்த ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 10 பேருந்துகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் திருப்பூருக்கே விட்டு இருக்கிறார்கள். அப்போதும் போதவில்லை. ஆகவே, நாங்கள் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, பருத்தி மார்க்கெட்டே கோபியிலும், சத்தியிலும் தான் இருக்கின்றது. ஆகவே, பருத்தி உற்பத்தி செய்கின்ற அதிகமான நூல்வளம் மிக்க நிலங்கள் கோபி, சத்தியமங்கலம் தாலுகாக்களிலேதான் இருக்கின்றன. ஆகவே, பெரியார் மாவட்டத்தில் மீண்டும் ஒரு கூட்டுறவு நூற்பாலை துவங்குவது என்றால், மாண்புமிகு இதய தெய்வம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால் பவானி சாகர் தொகுதியில் வறட்சியான புஞ்சைப்புளியம்பட்டியிலே--பெயரே புஞ்சைப்புளியம்பட்டி, அங்கேதான் துவங்க வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தியூருக்கே அமைச்சர் இல்லை என்கிறார், நீங்கள் புஞ்சைப்புளியம்பட்டிக்குக் கேட்கிறீர்களே.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்தாலும், மத்திய அரசின் வாயிலாக ஐ.டி.பி.ஐ. கடன் நமக்குக் கிடைப்பது இல்லை என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். அன்னை சத்யா பெயரில் கூட்டுறவு நூற்பாலையைத் துவக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் எத்தனையோ முயற்சிகள் செய்து மத்திய அமைச்சர்களைச் சந்தித்து, பல முறை அவர்களிடம் மனுக்களைத் தந்து நேரடியாகச் சந்தித்துக் கூறிய பிறகும், கடன் உதவி கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த நிதி நிலைக்கு ஏற்ப செய்ய இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *168*, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

168--

பொன்னேரி தொகுதியில் பழவேற்காட்டிற்கும் லைட் அவுஸ் பகுதிக்கும் இடையில் தரைமட்டப் பாலம் கட்டுதல்.

**16567-திரு. ஏ. ரவிக்குமார்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பொன்னேரி தொகுதி, பழவேற்காட்டிற்கும் லைட் அவுஸ் பகுதிக்கும் இடையே சுமார் 3/4 கி.மீ. நீளத்திற்கு தரைமட்டப் பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கணணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,